**தலைப்பு 302 - கூட்டுறவு ஊழியர்களின் ஆனைக்குழு**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிரயாம்

கூட்டுறவு ஊழியர்களின் ஆனைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இற்கு நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுறவு ஊழியர்களின் ஆனைக்குழுவின் நிதிக்கூற்றுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்தோபர் 28 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கபடுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுறவு ஊழியர்களின் ஆனைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமானதுமான பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றதென,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | மூலதன செலவின விடயத்திற்காக மொத்த நிகர நிதியேற்பாடும் எஞ்சியிருந்ததுடன் 02 மூலதன செலவின விடயங்களுக்கான மொத்த நிகர நிதியேற்பாட்டில் 61 சதவீதம் தொடக்கம் 75 சதவீதம் வரை எஞ்சியிருந்தது. | வழங்குனர்களினால் விலை முன்வைப்பதற்கு தோல்வியடைந்தமை, எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் சேவை, நடவடிக்கைகள் நிறைவு செய்வதற்கு தோல்வியடைந்தமை, சுகாதார காரணங்களினால் பயிற்சி நடவடிக்கைகள் நடத்தப்படாதிருத்தல் போன்ற காரணங்களினால் நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. | ஏற்பாடு செய்யப்பட்ட தொகை ஆண்டினுள் பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஆ)** | 03 மீண்டெழும் செலவின விடயங்களின் மொத்த நிகர நிதியேற்பாட்டில் 68 சதவித்திற்கும் 96 சதவீதத்திற்கும் இடைப்பட்ட நிதியேற்பாடு எஞ்சி காணப்பட்டதுடன் மேலும் 10 செலவின விடயங்களின் மொத்த நிகர நிதியேற்பாட்டில் 8 சதவீத்திற்கும் 48 சதவீதத்திற்கும் இடைப்பட்ட நிதியேறபாடு எஞ்சியிருந்தது. | காணப்பட்ட சுகாதார ரீதியான காரணங்கள், நல் கட்டுப்பாடுடன் மற்றும் சிக்கனமாக செலவு செய்தல், எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினம் ஏற்படாமை மற்றும் முன்வைக்கப்பட்ட மதிப்பீட்டினை விட நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டமை அடிப்படையில் நிதியேற்பாடு எஞ்சியது. | ஒதுக்கப்பட்ட தொகை ஆண்டினுள் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2. எல்லைகள் மீறுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரச உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" கணக்கிற்கு ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரகாரம் குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 700,000 ஆகவிருப்பினும் உள்ளவாரான பெறுவனவு ரூபா 638,490 ஆகியமையினால் எல்லை அடையப்படாமை ரூபா 61,510 ஆக காணப்படினும் குறைவான பெறுவனவு எல்லை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 07/2020(11) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் முற்பண "பீ" கணக்கிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தவணைக்காக மற்றும் வட்டி அறவிடப்படாமையினால், அறவிடப்படாத தவணைகளின் பெறுமதி ரூபா 110,108.00 ஆக காணப்பட்டது. அக் காரணத்தினால் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரகாரம் குறைந்த பெறுவனவு எல்லை அடையப்படாதிருந்தது.<br><br>குறைந்த பெறுவனவு எல்லை திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை ஏற்றுக் கொள்ளப்படுகின்றதுடன் எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் ஏற்பாதிருக்க உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | எல்லைகள் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) நிதி நிலைமை பற்றிய கூற்று

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | நிதி நிலைமை பற்றிய கூற்றில் நிதி சொத்துக்களின் கீழ் காசு மற்றும் காசுக்கு சமனானவையாக ரூபா 1,414,430 உம், நடைமுறை பொறுப்பின் கீழ் கட்டுநிதி மீதியாக ரூபா 1,414,430 உம் காண்பிக்கப்பட்ட வேண்டியிருப்பினும் அப் பெறுமதிகள் நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020.11.30 திகதிய 6/2020 ஆம் இலக்க திறைச்சேறி செயற்பாட்டு வழிகாட்டியின் பிரகாரம் 2020.12.31 இற்கு காசு புத்தகம் தீர்க்கப்பட்டு காணப்பட்ட மீதியான ரூபா 1,414,430 ஆன தொகை பொது திறைச்சேரிக்கு மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, 2020.12.31 இற்கு காசு மற்றும் காசுக்கு சமனானவை காணப்படாமையும் கட்டுநிதி மீதியொன்று காணப்படாமையும் தெரிவிக்கப்பட்டிருந்தது. | திறைச்சேரி புத்தகங்களின் பிரகாரம் நிதி நிலைமை தொடர்பான கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

**(ஆ) காசுப் பாய்ச்சல் கூற்று**

**---------------------------**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சலினை கணக்கிடும் போது மானிய மற்றும் மாற்றல் பெறுமதியான ரூபா 276,336 வெவ்வேறாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது ஆளணி வேதனம் மற்றும் செயற்பாட்டு செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்தது. திறன் அபிவிருத்திக்காக ஏற்கப்பட்ட ரூபா 89,113 ஆன செலவினம் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் கீழ் காண்பிக்கப்பட வேண்டியிருப்பினும் அது முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | மானியம் மற்றும் மாற்றல் பெறுமதியான ரூபா 276,336 ஆன தொகை காசு பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. வருகிற ஆண்டுகளிலிருந்து அது மானியம் மற்றும் மாற்றலாக வெவ்வேறாக காண்பிப்பதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டது.<br><br>மூலதன செலவினமாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள நிதியேற்பாடான திறன் அபிவிருத்திக்காக ஏற்கப்பட்ட ரூபா 89,113 ஆன செலவினம் பௌதீக சொத்துக்கள் நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய மூலதனம் கையேற்றல் கீழ் மூலதன நடவடிக்கையாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. | 02/2020 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் கீழ் நிதி கூற்றுக்கள் தாயாரிப்பதற்கு தொடர்புடைய 06 ஆம் இலக்க வழிக்காட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | ஆண்டினுள் முற்பண பணத்தில் அறவிடல் ரூபா 638,490 ஆக காணப்படினும் அது முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சல் கணக்கிடும் போது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆண்டினுள் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட முற்பணம் மாதம் தோறும் பொது திறைச்சேரி பிரதி செயலாளருக்கு மாற்றப்படுகின்றமையினால் முற்பண அறவிடல் மீதி முதலீட்டு நடவடிக்கையாக அடையாளப்படுத்த முடியாது. | 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் கீழ் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு தொடர்புடைய வழிக்காட்டி இல 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------

### 3.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படல்

-------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் கூட்டுறவு சங்கங்களின் ஊழியர்களுக்காக 12 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதற்கும், 36 ஊழிய புகார்கள்/ மேம்முறையீடுகள் தீர்ப்பதற்கும், ஆலோசனை வழங்கல்கள் 50 மேற்கொள்வதற்கும், கூட்டுறவு சங்கங்களுக்காக 30 ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், 03 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும், 11 ஊழிய புகார்கள்/ மேம்முறையீடுகள் தீர்த்தல்களும், ஆலோசனை வழங்கல்கள் 27 உம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கூட்டுறவு சங்கங்களுக்காக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | **Covid –** 19 தொற்று நிலையின் காரணத்தினால் சுகாதார காரணங்களின் அடிப்படையில் கூட்டுறவு சங்கங்களின் ஊழியர்கள் சேர்த்துக் கொள்வதற்கு கடினமாகியமை, மேம்முறையீடுகளுக்கு தொடர்பாக ஊழியர்கள் மற்றும் சங்கங்களின் உத்தியோகத்தர்கள் அழைப்பதற்கு முடியாமை மற்றும் 2020 ஒக்தோம்பர் தொடக்கம் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இராஜினாமா செய்தமை. | ஆண்டினுள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 23 ஆக காணப்பட்டதுடன் உள்ளவாரான பதவியணி 18 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் பதவி வெற்றிடங்கள் 05 காணப்படுகின்றதுடன் நிர்வாக உத்தியோகத்தர் பதவிகள் 2017 நவம்பர் 30 ஆம் திகதி தொடக்கம் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் அது இது வரையில் ஆண்டுக்கு ஆண்டு நீடிக்கப்பட்டு வருகின்றது. | இந்த நிறுவனத்தில் காணப்படுகின்ற இரண்டாம் நிலையில் 05 வெற்றிடங்களும் ஒருங்கிணைந்த சேவை உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களாக காணப்படுகின்றமையினால் அவ் வெற்றிடங்கள் நிரப்பப்படுமாறு ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அவ்வப்போது கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளமை தெரிவிக்கப்பட்டிருந்தது. | தேவையான பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |